1987 ஏப்ரல் 2]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் குறித்து பொதுப்பணித் துறையும் தமிழ்நாடு மின்வாரியமும் இணைந்து ஒரு கூட்டு அறிக்கை தயாரித்து வருகிறது. இவ்வறிக்கை அரசுக்கு கிடைத்தபின் இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து கேரள மாநில அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் கீழ் நல்லாறு என்னுமிடத்தில் அணை கட்டுவதன் மூலம் எத்தனை ஏக்கர்கள் பாசன வசதி அடைகிறது? எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்படுகிறது? எப்போது ஆய்வுவேலை முடியும் என்று அறிய விரும்புவதோடு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் மொத்தத்தில் எத்தனை ஏக்கர் பாசன வசதி அடைகிறது, விரிவுபடுத்துவதால் கூடுதலாக எவ்வளவு ஏக்கர் பாசன வசதி அடையும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பு சுமார் 81.50 கோடி ரூபாய் ஆகும். இந்தத் திட்டம் இப்போது ஆய்விலே இருந்துக் கொண்டிருக்கிறது. மின் வாரியமும், பொதுப்பணித் துறையும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருப்பதால் இந்தத் திட்டத்தை இரண்டு பேரும் சேர்ந்து ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். இப்போது மொத்தம் நான்கு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கர் பாசன வசதி பெற்றுக்கொண்டிருக்கிறது. இதன் மூலமாக இப்போது கிடைக்கின்ற அந்த பாசன வசதி உறுதி செய்யப்படும்.

சித்தேரி ஏரிக்கு மஞ்சினை ஓடையிலிருந்து புதிய கால்வாய்.

259—(* வினா எண். 3961)—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்தேரி ஏரிக்கு மஞ்சினை ஓடையிலிருந்து புதிய கால்வாய் வெட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திருமதி தா. இராசாம்பாள்: தலைவர் அவர்களே, இந்த சித்தேரி ஏரிக்கு எந்தவிதமான வரத்து வாய்க்காலும் இல்லாத காரணத்தினால் எல்லா நேரத்திலும் இந்த சித்தேரி ஏரி நீர்ப்பிடிப்பு இல்லாமல் இருந்து வருகிறது. ஏற்கனவே அங்கே மழை நீரைத் தேக்குகின்ற ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது அதுவும் இல்லாத நிலையில் அங்குள்ள நிலங்களை பட்டா செய்து கொடுத்துவிடுவதால் எந்தவித நீர்வரத்தும் இல்லாமல் இருக்கிறது. ஏறக்குறைய 100 ஏக்கர் பரப்புள்ள இந்த ஏரி 200 ஏக்கருக்கு மேற்பட்ட 250 ஆயக்கட்டுக்காரர்களை உள்ள டக்கிய இந்தப்பகுதிக்கு மஞ்சினி ஓடையிலிருந்து புதியதாக ஒரு வாய்க்கால் வெட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த கண்மாய்க்கு வசிஷ்டா நதியிலிருந்து காட்டுக்கோட்டை மற்றும் தலைவாசல் ஆகிய இரண்டு அணைகள் மூலமாக தண்ணீர் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதிகாரிகள் கொடுத்த புள்ளி விவரத்தின்படி பார்ப்போமானால் ஒரு வருஷம் தவிர மீதிவருஷம் ஏறக்குறைய 70%, 80% அளவுக்கு அங்கே விவசாயம் நடந்திருக்கிறது. ஓடையிலிருந்து இங்கே தண்ணீர் கொண்டு வருவதென்றால் நடுவிலே 53 அடி அளவிற்கு உயரமான நிலப்பரப்பு இருக்கிறது. அதை வெட்டி கால்வாய் அமைப்பதற்கு மிக அதிகமான பணம் செலவாகும் என்பதால் அதை அரசு ஏற்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

பெரியகுளம் வட்டம் மஞ்சளாறு நீர்த்தேக்கம்.

260—(*வினா எண். 5638) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பெரியகுளம் வட்டம் மஞ்சளாறு நீர்த்தேக்கத்தில் மண்மேடு பரவி நீர் கொள்ளளவு குறைவதைத் தடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, மஞ்சளாறில் உள்ள கேச்மெண்ட் ஏரியா என்று சொல்லக்கூடிய மஞ்சளாறு அணையில் தண்ணீர் தேங்கக்கூடிய இடத்தில் தனியார்கள் நிலப்பரப்பை ஆக்கிரமித்து, அதை தங்களுடைய விவசாயிகளைக் கொண்டு நடத்தி, மேலே இருந்து வருகின்ற தண்ணீரை அணை போட்டு அணைக்கு வராமல் தடுப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், இதுகுறித்து அரசு எந்தவித நடவடிக்கை எடுத்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.